## அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி

(தேசிய தர நிர்ணயக் குழுவின் மறு தர மதிப்பீட்டிலும் “ஏ”தகுதி பெற்றது)

நாள் : 8.3.2017

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் 8-3-2017 அன்று **“சர்வதேச மகளிர் தினம்”** கொண்டாடப்பட்டது. மகளிரியல் துறை மற்றும் மகளிரியல் மையம் இதற்கான ஏற்பாடுகளை சிறப்பாகச் செய்திருந்தது.




அழகப்பா பல்கலைக்கழக மகளிரியல் துறை பேரா.கா.மணிமேகலை தமது வரவேற்புரையில், உலக மகளிர் தின நாளை ஆணாதிக்க சமூகத்தில், பெண்களின் உழைப்பிற்கான மரியாதையை வென்றெடுத்த நாள் இது என குறிப்பிட வேண்டும் என்றார். “கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக் காட்சி கெடுத்திடலாமோ? பெண்களறிவை வளர்த்தால் வையம் பேதமையற்றிடுங் காணீர்!”என்று பாரதியின் கூற்றுக்கிணங்க பாலின சமத்துவ சமுதாயம் அமைய வேண்டும் என்றார். புாரதி கண்ட கனவை நனவாக்குவதற்கும், சமூகத்தில் பெண்கள் உயரிய நிலையை அடைவதற்கும், உரிமைகளை கேட்டு பெறுவதற்கும் தயாராக இருக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.



அழகப்பா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேரா.சொ.சுப்பையா அவர்கள் தமது தலைமை உரையில், மகளிர்தினம் என்பது ஆண்களை சாடுவதற்காக அல்ல. பாலின சமத்துவத்தையும், சமநீதியையும் உறுதிப் படுத்துவதற்காகவே கொண்டாடப்படுகிறது என்றார். ஆண்களை மதிக்கக்கூடிய பெண்கள் தான் சமூகத்தில் உயர்ந்துள்ளனர் என்றும், பெண்களை மதிக்கக்கூடிய ஆண்கள் தான் வளர்ந்திருக்கின்றனர் என்றும் குறிப்பிட்டார். பெண்கள் வெற்றி பெறும்போது முதலில் அதை பாராட்டக்கூடியவர்வர்கள் ஆண்களாகத்தான் இருக்க வேண்டும். ஒரு பெண் தன்னுடைய வளர்ச்சிக்கு ஆண்களின் பங்கை பயன்படுத்துவது மிகவும் அவசியமானது. ஆண்களுக்குப் பெண்களும், பெண்களுக்கு ஆண்களும் மதிப்பு அளிக்க கூடியவர்களாக இருக்க வேண்டும். நமது கலாச்சாரமும், பண்பாடும், வரலாறும் பெண்களை மதிக்கிறது. அதனால், நமது கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் சேதப்படுத்தாமல் கிடைக்கின்ற வளர்ச்சியே உண்மையான நிலையான வளர்ச்சி என்றார்.




ஒரு ஆணின் வெற்றியிலும் பெண்ணின் பங்களிப்பு உள்ளது. ஆகவே ஒரு ஆண் பெண்ணையோ, பெண் ஆணையோ எதிரியாக பார்க்கக் கூடிய கருத்து முற்றிலும் மாற வேண்டும். தன்னுடைய வளர்ச்சிக்கு ஆண்களை பயன்படுத்திய பெண்களே முழுமையான முன்னேற்றத்தை அடைந்துள்ளனர். அதுதான் ஒரு ஆரோக்கியமான வெற்றியாகவும், முன்னேற்றமாகவும் இருக்க முடியும். மேலும் அவர் குறிப்பிடுகையில், வாழ்க்கை என்பது எத்தனை வருடம் வாழ்கிறோம் என்பது முக்கியமில்லை, எத்தனை நாட்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறோம் என்பதே முக்கியம். தன்னுடைய மகிழ்ச்சியை ஆணும், பெண்ணும் பகிர்ந்து கொண்டால் இச்சமூகம் ஆரோக்கியமாக இருக்கும். யார் ஒருவர் சமூகத்தோடு ஒத்துபோகிறார்களோ, மேலும் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தக்கூடியவர்களாக இருக்கிறார்களோ அவர்களே வெற்றியைக் காண்கிறார்கள். அழகப்பா பல்கலைக்கழகத்தில் பெண்களுக்கு ஒவ்வொரு துறையிலும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது என்று அவர் தெரிவித்தார்.

சாகித்ய அகாடமி முன்னாள் உறுப்பினரும், நல்லாசிரியர் விருது பெற்றவருமான கவிஞர் தங்கம்மூர்த்தி தமது சிறப்புரையில், உலக மகளிர்தினமான இன்று நாம் நந்தினிகளையும், ஹாசினிகளையும் பற்றி கவலைப்பட வேண்டிய தருணம் இது. உணவு, ஆரோக்கியம், படிப்பு என்று எல்லா செயல்களிலும் பெண்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு ஆணாதிக்கச் சமூகத்தில் சிக்கித் தவிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே பெண் குழந்தைகளின் வளர்ச்சி என்பது ஒரு கேள்விக்குறியாகவே உள்ளது. இச்சமூகம் பெண்களின் மீது தேவையற்ற கருத்துக்களைத் திணிக்கின்றது. இது போன்ற சூழல்களில் பெண்கள் மிகவும் கவனமாக இருந்து செயல்பட வேண்டும். மேலும், அறிவியல் ரீதியாக ஆண்களைவிடப் பெண்களுக்கு மனவலிமை அதிகம் உண்டு. ஆதலால், அவர்களுக்கு எதிரான கொடுமைகளை கண்டு அயர்ந்து போகாமல் எதிர்த்து நின்று போராடுகின்றனர். இன்றைய காலகட்டத்தில் பெண்கள் முன்னேறியிருப்பது போன்று தோன்றினாலும், இது மிகவும் சிறிதளவுதான். ஆகவே பெண்களின் நிலைமையை உணர்ந்து செயல்படுவோம் மற்றும் அவர்களின் முன்னேற்றத்திற்கு வழிவகுப்போம் என்றும் எடுத்துரைத்தார்.

இவ்விழாவில் காரைக்குடியைச் சேர்ந்த அஞ்சலக பணியாளர் திருமதி.சலீமாபேகம் மற்றும் தொழில் முனைவோர் திருமதி.சௌந்தரம் ஆகியோருக்கு அவர்களின் சேவைகளைப் பாராட்டி சிறந்த மகளிர்க்கான விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

முன்னதாக, மகளிரியல் துறை மற்றும் மையம் ஆகியவை இணைந்து வெளியிட்ட மின்னணு செய்திமடலை (E-Newsletter) துணைவேந்தர் வெளியிட கவிஞர். தங்கம்மூர்த்தி அவர்கள் பெற்றுக் கொண்டார். மகளிர் தினத்தை முன்னிட்டு பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

மகளிரியல் மையத்தின் உதவிப் போராசிரியை முனைவர். வீ.வீரமணி நன்றி கூறினார். இவ்விழாவில் 600-க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மற்றும் பல்கலைக்கழகத்தின் உறுப்பு கல்லூரி மாணவ மாணவிகள், பேராசியர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவ, மாணவிகள், கலந்து கொண்டனர்.

பேரா.வி. பாலச்சந்திரன்
பதிவாளர் (பொ.)